**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Domestic Virtues in Aasarakkovai

**Dr. R. Vanitha***,
Head of the Department, Department of Tamil,
Queens College of Arts and Science for Women, Punalkulam, Pudukkottai.
ORCiD: https://orcid.org/0009-0001-1657-1399
*Correspondence: natchathravani@gmail.com, Tel: 9994855224.

**Article Info**
Received on 22-April-2026, Revised on 25-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Aasarakkovai is a noteworthy text among the literatures that emerged to nurture human dignity. It was created on the foundational principle that moral values and discipline must endure in every aspect of life. The Pathinenkeelkanakku (Eighteen Lesser Texts) books are classified based on the concepts of Aram (Virtue), Porul (Wealth), and Inbam (Love/Pleasure). Aasarakkovai highlights moral and disciplined virtues through Venba (a form of classical Tamil stanza) consisting of five or fewer lines. Specifically, this paper delves into how the text outlines the core responsibilities of a householder, emphasizing that a harmonious domestic life is built on clean habits, respect for elders, and unconditional hospitality. By analyzing these poetic verses, the study illustrates how daily routines and social etiquette are elevated into spiritual and moral duties. Ultimately, this research aims to highlight the enduring relevance of these ancient domestic ethics in guiding modern family structures toward a righteous path.

***KEYWORDS:*** *Domestic life (Illaram), Hospitality (Virundhu), Benevolence/Righteous virtue (Nallaram), Positive thinking (Narchindanai), Thoughts on domestic life (Illarachindanai), Doing charity/virtuous deeds (Aram seydhal), Good discipline/Good conduct (Nallolukkam).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# ஆசாரக்கோவையில் இல்லறப் பண்புகள்

*[*] **முனைவர் ரெ.வனிதா,** துறைத்தலைவர், தமிழ்த்துறை, குயீன்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி, புனல்குளம், புதுக்கோட்டை, அலைபேசி. 9994855224,
மின்னஞ்சல்: natchathravani@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனித மாண்பை வளர்க்கும் வகையில் தோன்றிய இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க நூல் ஆசாரக்கோவை ஆகும். வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுகளிலும் ஒழுக்கம் சார்ந்த பண்புகள் நிலைக்க வேண்டும், என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டது. பதினென்கீழ்கணக்கு நூல்கள் அறம், பொருள் இன்பம் என்னும் பாகுபாடுகளைக் கொண்டு விளங்கும். ஐந்து அல்லது அதனினும் குறைந்த அடிகளால் ஆன வெண்பாக்களைக் கொண்டு ஒழுக்கம் சார்ந்த பண்புகளை ஆசாரக்கோவை எடுத்துக்காட்டுகிறது.

**குறிப்புச் சொற்கள்**

இல்லறம், விருந்து, நல்லறம், நற்சிந்தனை, இல்லறச்சிந்தனை, அறம் செய்தல், நல்லொழுக்கம் ஆகியவை ஆகும்.

**முன்னுரை**

இல்லற வாழ்வில் பின்பற்ற வேண்டிய செயல்களையும், விருந்தோம்பல் மாண்புகளையும், விருந்தினர்களை உபசரித்தல் போன்ற பண்புகளையும், வீட்டைப்பேணும் முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இல்வாழ்வில் ஈடுபட்ட ஒருவன் தன்பாலுள்ள மாசு குறைந்து, அன்பு திறக்கப்பெற்று அவ்வன்பு மனைவி மக்கள் மீது பொழிவும் காணும் பேறுபெறுகிறான். மக்கட்பேற்றிற்குப் பக்கத்தில் விருந்தோம்பலையும்,அன்புடைமையும் பெற்ற தலைவனும் தலைவியும் கூடி வாழ்வு நடத்தி மக்களை ஈன்ற பின்னரே அன்பின் தன்மை இன்னதென்று அனுபவத்தில் உணருகின்றனர். அன்பின் தன்மையை உணருவதோடு மட்டுமல்லாமல் புதிதாக வரும் விருந்தினரை உபசரித்து விருந்தளிக்கும் பண்பினைப் பெறுகின்றனர். இப்பண்பானது இல்லற வாழ்க்கை சார்ந்த அறமாக அமைகின்றன. சங்ககாலத்தில் பெண்கள் நிலை பொதுவாக சிறப்புற்றிருந்தது. காதல் திருமணம் புரிய பெண்களுக்கு உரிமை இருந்தது. விருந்தோம்பல், கொடையளித்தல் முதலிய உரிமைகளைப் பெற்றிருந்தனர். நாட்டுப்பற்று கொண்ட வீரத்தாய்மார்களாகவும் பெண்கள் விளங்கினர். மேலும், ஆசாரக்கோவையில் இல்லறம் பெறுமிடம் பற்றிக் காண்போம்.

**இல்லறம்:**

தலைவனும்,தலைவியும் பலரும் அரியும்படி மணஞ்செய்து கொண்டு நடத்தும் வாழ்வே இல்லறமாகும். கணவனும் மனைவியும் மனம் ஒத்து ஒருவர் நலனில் ஒருவர் பங்கு கொண்டு

Copyright © Author(s), Article DOI: https://doi.org/10.63300/tirjts06012026 

தன்னலமின்றி வாழ்வதாகும். இல்லத்தில் இன்ப துன்பங்கள் கணவன் மனைவியர்க்குப் செம்மை பெறுகின்றது. இவற்றில் அன்பு என்னும் மனிதநேயப்பண்பின் ஒப்புமை புலப்படுகிறது என்பதை

**'ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை" (கலி. 25)**

என்று பாலைக்கலியில் ஒரு ஆடையில் இரு கூறை உடுத்தும் தலைமக்களாயினும் மனம் ஒன்றி வாழும் வாழ்வே உயர்வானது எனக் குறிப்பிடுகின்றது. பிறர் மனைவியை விரும்புதல். கள்ளருந்துதல், களவு செய்தல், சூதாடுதல், கொலை செய்தல், என்ற இவ்வைந்து பாவச்செயல்களை மனத்தாலும் நினைக்கமாட்டார்கள் அதற்கு மாறாக எண்ணினால் நரகத்துக்குச் செல்லும்படியாக நேரிடும்.

**'பிறர்மனை கள் களவு சூஅ கொலையோடு**
**அறனறிந்தார் இவ்வைந்தும் நோக்கார் திறனிலர்**
**என்னப்படுவதூஉம் அன்றி நிர்யத்துச்**
**செல்வழி உய்த்திருத லால்" (ஆ. கோவை – 37)**

இதனையே வள்ளுவரும் பிறன் மனைவியை விரும்பாத ஒருவனே உண்மையில் அறநெறி தவறாமல் வாழ்க்கை நடத்தும் இல்லறத்தான் ஆவான். **ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும், கருத்தால் ஒன்றுப்பட்டு இல்லறத்தில் இருந்தனர். மேலும், அவர்கள் நல்லறம் செய்வது அன்பின் வழிப்பட்ட உள்ளத்துணர்ச்சியே ஐந்திணையாக வழங்கப்பட்டன. இந்த ஐந்து ஒழுகலாறுகள் முறையே, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், என்று பெயரிட்டு வழங்கப்படுகின்றன. இந்நிலையினை ஒரு நாடக வழக்காக அமைத்து தொல்காப்பியம் காட்டுகின்றது** இல்வாழ்க்கையின் பயன் அறம் அவ்வறத்தோடு கூடி மனையறம் புரியும் மாண்புடையவன் பிறன் மனைவியை நினைத்தலும் அறியாதவனாக கருதப்படுவான் என்று வள்ளுவர் கூறுகையில்

**'அறனியலான் இல்வாழ்வான் என்பான்**
**பெண்மை நயவாதவன்" (திரு.147)**

ஒருவன் மனைவியை மனத்தாலும் கருதாத ஆண்மையே அறிவுடையோர்க்கு அறமும் ஒழுக்கமும் ஆகும். இல்வாழ்க்கை சிறப்பாக வாழ விருந்தோம்புதல் மிகவும் அவசியம்

**விருந்து**

தன்னுடைய இல்லத்திற்கு வந்த விருந்தினர்களுக்கு முதலில் உணவினை அளித்தல் வேண்டும். இன்பத்தோடு சிரித்துக்கொண்டே இனிமையான சொற்களைக் கூறி வரவேற்க வேண்டும். பின்பு கால் கழுவுவதற்கு நீரினைக் கொடுத்தல் வேண்டும். உட்காருவதற்குரிய இடத்தில் அவர்களை உட்கார வைத்தல் படுத்து உறங்குவதற்கான பாயினைக் கொடுத்தல் வேண்டும். மேலும் அவர்கள்

தம்முடைய இல்லத்தில் தங்குவதற்கான இடத்தையம் கொடுத்தல் வேண்டும். இதனை விருந்தோம்பலின் சிறப்புக்களாக ஆசாரக்கோவை வலியுறுத்துகிறது.

**'முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்**
**கிடக் கையோடு இவ்வைந்தும் என்பதனைச் சென்றார்க்கு**
**ஊணொடு செய்யும் சிறப்பு" (ஆ. கோவை – 54)**

இதனையே உலக வாழ்க்கையில் ஒருவருக்கு இன்னொருவன் உதவிடும் பண்பும் உபசரிக்கும் மாண்பும் உலகத்திலுள்ள உயர்ந்தவற்றிளெல்லாம் மேலானது ஆகும். வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்று உபசரிக்க வேண்டியது வீட்டிலுள்ள பெரியோர்களின் கடமையாகும் வருகின்ற விருந்தாளிகளுக்கு முன்பு ஊடல் மறந்து ஒற்றுமையாக நடந்து அவ்விருந்தாளிகள் செல்லுகின்ற வரை முகமலர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டியது விருந்தோம்பலின் முக்கிய அம்சமாகும். இல்லறத்தில் ஊடலும் கூடலும் மாறி மாறி நடப்பது இயல்பு இதனையே ஆசாரக்கோவைக்கு வலுசேர்க்கும் வகையில் மூதுரைப்பாடலும்

**'விழுந்துகள் ஒழிந்து ஊடல்**
**ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து உண்மைபேசி**
**உப்பிலா கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்**
**முப்பழமொடு பாலன்ணமும் முகம் கடுத்திடுவாராயின்**
**கப்பிய பசியினொடு கரும் பசியாகும் தானே (மூதுரை – 18)**

என விருந்து அமைய வேண்டிய முறை குறித்து மூதுரையானது விளக்குகிறது.

விருந்தோம்பல் பண்பு மிகவும் சிறப்பாகப் போற்றப்பட்டு வந்திருக்கின்றன. இதனால் பாணர்கள், பொருநர்கள், விறலியர் போன்றவர்கள் மன்னர்களை நாடித் தங்கள் வறுமையினைப் போக்கிக் கொள்வார்கள். வாயில் புகுந்த நீர் உடனே செல்லாதவாறு நன்றாகக் கொப்பளித்து துப்புதல் வேண்டும். மந்திரங்களைக் கூறி உடல் முகத்தில் அமைந்துள்ள உறுப்புக்களை சுத்தம் செய்தல் வேண்டும். இதனை

**'இழியாமை நன்குமிழந்து எச்சில் அறவாய்**
**அடியோடு நன்கு துடைத்து வழ்வுடைத்தா**
**முக்கால் பிடித்துத் துடைத்து முகத்துறுப்பு**
**எத்த வகையால் விர்லுறுத்தி வாய்பூசல்**
**மிக்கவர் கண்ட நெறி" (ஆ. கோவை – 2)**

என ஆசாரக்கோவை விளக்குகிறது.

**இல்லறம் நல்லறம்**

எப்பொழுதும் நன்மையே கிடைக்க வேண்டும் என விரும்பும் பெண்கள் விடியற்காலையில் எழுந்து குப்பைகளை நீக்கி பின்பு பசுஞ்சாண நீரைத் தெளித்து சுத்தம் செய்து சமைக்கின்ற பாத்திரங்கள் எடுத்து சுத்தம் செய்து பாத்திரத்திற்கு பூ வைத்து தீயினை மூட்டுதல் வேண்டும் என்பதை

**'காட்டுக் களைந்து கலம் கழீஇ இல்லத்தை**
**ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை**
**நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து**
**இல்லம் பொலிய அடுப்பினுள் திப்பெய்த**
**நல்லது உறல் வேண்டுவார் ' (ஆ. கோவை 40)**

தமிழர்களின் சிறந்த பண்பாகிய விருந்தோம்பல் பண்பு தற்காலங்களில் குறைந்து காணப்படுகின்றது. தற்காலத்தில் உள்ளதுபோல விடுதிகள் உணவுக்கூடங்கள் அக்காலத்தில் இல்லை. இருப்பினும் பழங்கால மக்கள் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்றனர்.

**இல்லறச் சிந்தனை**

ஒரு நாட்டு நலன் அந்நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் பொறுத்தே நிற்கும். பெண் பிறவியின் விழுமிய நோக்கம் அன்பால் ஒருவனை மணந்து ஒழுங்குபட இல்வாழ்க்கை என்னும் இயற்கை வாழ்வு நடத்துவதில் நிறைவேறுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் சிந்தனை அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு காலகட்டத்திலும் வலுப்பெற்றுதான் வருகிறது பெண்பிறவியின் விழுமிய நோக்கம் அன்பால் ஒருத்தி ஒருவனுடனும் ஒருவன் ஒருத்தியுடனும் ஒழுக்க நெறியுடன் வாழ வேண்டும். ஒழுக்கநெறி பற்றி ஆசாரக்கோவை அறிவுடையவர் தம்மை அழகு செய்து கொள்ளும் விலை மகளிர் வாழ்கின்ற இடத்தில் இல்லத்தை அமைத்துக் கொள்ள மாட்டார்கள்.அந்த இடம் எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருந்தாலும் அவற்றை விரும்பமாட்டார்கள்.

**'வண்ண மகளிடத்தொரு தம்மிடம்**
**ஒள்ளியம் என்பார் இடங் கொள்ளார் தெள்ளி**
**மிகக்கிழமை உண்டெனினும் வேண்டாவே-**
**உவப்பள வேறாய் விடும்" ஆ. கோவை – 82)**

என்று இல்லற வாழ்வு தழைக்கப் பெண்கள் தாம் காரணம் என்று கருதப்பட்டனர். ஆவதூம் பெண்ணால் அழிவனம் பெண்ணால் என்ற கொள்கை தமிழகத்தில் நீண்ட காலமாக உண்டு. அன்பும், அறிவும், பண்பும், திறமையும் உள்ள பெண்களால்தான் குடும்பங்கள் சிறப்படையும் நல்ல குலத்தில் பிறந்த பெண்கள தன்னுடைய கணவரை அன்றி வேறு ஒருவரையும் திரும்பிக்கூட பார்க்க மாட்டார்கள் வேறு ஒரு ஆடவன் எத்துணை அழகாக இருந்தாலும் தன்னடைய மனைவியைத் தவிர வேறு யாரையும் பார்க்க மாட்டார்கள் என்று ஆசாரக்கோவை உணர்த்துகிறது.

**'தம்மேனி நோக்கார் தலையுளரார் கைந்நொடியார்**

**எம்மேனி யாயினம நோக்கார் தலைமகள்**

**தம்மேனி அல்லால் பிற" (ஆ. கோவை – 77)**

மேலும் சூதாடுகின்ற இடத்திலும், அதிகமான ஆரவாரம் நீங்கப் பெறாத இடத்திலும் மூடர்களைத் தவிர அறிவுடைய சான்றோர்கள் ஒரு பொழுதும் நுழையமாட்டார்கள். அவ்வாறு அவர்கள் நுழைந்தால் அவர்களுக்கு துன்பம் தான் மிகுதியாகும்

**'சூதர் கழகம் அரவம் அறாக்களம்**

**பேதைகள் அல்லார் புகாத அர் புகுபவேல்**

**ஏதம் பலவம் தரும் ' (ஆ கோவை – 98)**

இல்லறம் நல்லறமாக சிறக்க பெண்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது தன்னையும காத்து தன் கணவனையும் குடும்பததையும் காப்பவள் பெண்

**அறம் செய்தல்**

இல்லறத்தாரிடம் வந்து இரப்பவர்க்கு இல்லையெனாது வழங்குதலே இல்வாழ்வின் தலையாய அறமாகும். இதற்காவே தலைவன் இன்னுயிர் தலைவியையும் விட்டுப் பிரிந்து பொருள் தேடச் செல்கிறான். அப்பொழுது இல்லை என்று வரும் இரவலர்க்குப் பொருள் கொடுத்தல் வேண்டும். அதுவே அறமாகும். இதனை

**'தொலைவாசியிரந்தோர்ககொன்றீயாமை யிளி**

**இல்லன மிரந்தோர்க் கொன்றீயாமை யிளி வெனக்**

**இடவின்றி யிரந்தோர்க் கொன்றீயாமை யிளி வெனக் (கலித்.15)**

என கலித்தொகை உணர்த்துகிறது. எறும்பானது தனக்கான உணவினைத் தானாகவே சேர்த்துக்கொள்ளும், தூக்கணாங்குருவி தனானகவே வசிப்பதற்கு ஏற்ற இடத்தினை தானாகவே வீடு கட்டிக் கொள்ளும். காகமானது உணவினைப் பார்த்தவுடன் தான் மட்டும் உண்ணாது தன்னடைய சுற்றத்தாரையும் அழைக்கும் இவற்றையெல்லாம் இல்வாழிவல் ஒருவன் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறத்துகிறது ஆசாரக்கோவை

**'நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை என்றிவைபோல்**

**தன் கருமம் நல்ல கடைப்பிடித்துத்தம் கருமம்**

**அப்பெற்றியாக முயல்வர்க்கு ஆசாரம்**

**எப்பறெ றியானும் படும் - (ஆ கோவை – 96)**

எனப் பாடல் அறியலாகிறது.

**இல்லறமும் நல்லறமும்**

இல்லறம் காத்தலும், விருந்தாம்பலும், வீரச்செயல்கள் மட்டும் தமிழ்பெண்கள் அறிந்திருக்கவில்லை. அதற்கும் மேலாக அற ஒழுக்கத்திலும் நிரம்பியவர்களாக திகழ்ந்தனர்.தமிழகத்தில் தோன்றி தமிழர் வாழ்வையும் தமிழ் இலக்கியத்தையும் வளப்படுத்தியவர் ஔவையார். தமிழ்ப் பெண்ணுலகில் தலைமை ஓங்கி நிற்கும் பெண்மணியாகத் திகழ்ந்தார்.நல்லகுடியில் பிறந்தவர்கள் தன்னிடம் நிறைய செல்வமானது இருக்கிறது. நான் தான் நிறைய படித்துள்ளேன் என்று பேசாத பெண்கள் காணப்பட்டனர்.

**'இறைவன் முன் செல்வமும் கல்வியும் தேஆும்**
**குணமும் குலமுடையார் உறார் பகைவர்போல்**
**பாரித்துப் பல்கால் பயின்று “ (ஆ கோவை 11)**

என்று வலியுறுத்துகிறது.

நல்ல நெறிமுறைகளை அறிந்து அதன்படியே வாழ்கின்றவர்கள் கட்டிலின் மீது உறங்குகின்றவர்களுக்கு காலினைக் கழுவ மாட்டார்கள்

**“கிழந்தாரைக் கால்கழுவார் பூப்பெய்யார் சாந்து**
**மறந்தானும் எஞ்ஞான்றும் பூசார் கிடந்தார்கண்**
**நில்லார்தாம் கட்டின் மிசை“ (ஆ கோவை 87)**

என வலியுறுத்துகிறது.

மாலைப் பொழுதானவுடன் படுத்து உறங்குதல் கூடாது உணவு உண்ண கூடாது ஒருவர் மீது அதிகமாக கோபம் கொள்ளமாட்டார்கள். மாலைப் பொழுதானவுடன் மறவாது விளக்கினை ஏற்றுவார்கள் இவ்வாறு செய்தல் நல்ல நெறிகள் என்று

அந்திபொழுது கிடவார் நடவாரே
உண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்னந்தி
அல்குண்(டு) அடங்கல் வழி" (ஆ கோவை 29)

விளக்குகின்றது.

**'உச்சியம் போழ்தோடு இடையாமம் ஈர்அந்தி**
**மிக்க இருதேவர் நாளோடு உவாத்திதி நாள்**
**அட்டமியும் ஏனைப் பிறந்தநாள் இவ்வனைத்தும்**
**ஒட்டார் உடன் உறைவின் கண்" (ஆ -கோவை -43)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

**நல்ஒழுக்கம்**

ஒழுக்கம் என்பது வாழ்க்கையில் கடைசி வரை தேவை. அது தொடர்ந்து வர வேண்டும் என்ற கூறியுள்ளார். எவ்வளவு பழமை ஆன போதிலும் சிறப்புக்குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்வாழ்க்கை என்று கூறுகிறார். ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் விலைமதிக்க முடியாதது உயிர் எல்லாம் பொருள்களையும் விடச் சிறந்தது. அத்தகைய உனயிரைக் கொடுத்தாவது ஒழுக்கத்தைக் காத்தல் வேண்டும் என்கிறார் டாக்டர் மு. வரதராசனார்.

ஒழுக்கமுடைய சான்றோர்கள் ஒரு பொருளை வீசி எறிதல், கல்லெறிதல் தூரத்தில் செல்கின்றவர்களை சத்தமிட்டு அழைத்தல், இகழ்ந்து பேசுதல், கைதட்டல் சைகை காட்டி கண்ணசைத்தல் போன்றவற்றை ஒழுக்கமுடையவர் வாழ்க்கையில் இவற்றை கடைபிடிக்கமாட்டார்கள் என்பதை,

**'தெறியோடு கல்லேறு வீளை விளியே**
**விகிர்தம் கதம் கரத்தல் கையுடை தோன்ற**
**உறுப்புச் செகுந்தலோடு இன்னவை எல்லாம்**
**பயிற்றார் நெறிப்பட்டவர் (ஆ கோவை 53)**

என்ற இப்பாடலால் அறியமுடிகிறது.

**முடிவுரை**

நீதி, நெறி, ஒழுக்கம் முதலியவற்றை ஒதுக்கிவிட்டவர்கள் எல்லாரினும் மிகுந்த கடையானவன் எவரானாலும் பிறருடைய மனைவியரை விரும்பும் பேதையே ஆவான். அப்பொழுது அச்சத்தால் தான் கருதிய இன்பத்தையும் இழக்கின்றான் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது இப்படி பெண்களும் ஆண்களும் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக மாற்றி இன்றைய மக்களுக்கு மிகச்சிறந்த எடுத்தக்காட்டாக மக்கள் வாழ்ந்தனர் என்பதை உணர முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1.கலித்தொகை, பா.25

2. ஆசாரக்கோவை, பா.37

3. தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், பக்.04

4. திருக்குறள்,பா.147

5. ஆசாரக்கோவை, பா.54

6. மூதுரை,பா.18

7. ஆசாரக்கோவை, பா.02

8. மேலது,பா.40
9. மேலது,பா.82
10. மேலது,பா.77
11. மேலது,பா.18
12. கலித்தொகை, பா.15
13. ஆசாரக்கோவை, பா.96
14. மேலது, பா.11
15. மேலதுபா.,87
16. மேலது,பா. 43
17. மேலது,பா. 53

**துணைநூற்பட்டியல்**

**[1].** திருக்குறள் ச. சீனிவாசன் பரிமேலழகர் உரை ஜோசப் காலனி ஆதம்பாக்கம் சென்னை .

**[2].** அ.விசுவநாதன் கலித்தொகை சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை

**[3].** பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் சாரதா பதிப்பகம் சாந்தி அடுக்கம், கிருஷ்ணாபுரம் தெருராயப்பேட்டை சென்னை -14

[4]. ஆசாரக்கோவை சைவ சித்தாந்தம் நூற் பதிப்பு கழகம் சென்னை 1939

**[5].** வனிதாமணி இரா (முனைவர்) தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், மகேஸ்வரி பப்ளிகேஷன்ஸ், 3/350,பாண்டியன் எஜிகேஷ்னல் டிரஸ்ட், விருதுநகர், 2026

Copyright © Author(s), Article DOI: https://doi.org/10.63300/tirjts06012026 